**செய்தி வெளியீடு எண்: 013** **நாள்: 04.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.1.2018) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித்துறை சார்பில் சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 75 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள அரசு அலுவலர்களுக்கான ‘‘ஏ’’ மற்றும் ‘‘பி’’ வகை 200 குடியிருப்புகள் கட்டும் பணிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் ஏலகிரி மலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் 61 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாளிகையையும் திறந்து வைத்தார்கள்.

அரசு குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள், வணிக வரி அலுவலகங்கள், நீதிமன்றங்கள் உட்பட பல பொதுக் கட்டடங்களுக்கு திட்டமிட்டு, வடிவமைத்து, மதிப்பீடு தயாரித்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல், பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளை பொதுப்பணித் துறையின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 75 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு அலுவலர்களுக்கான ‘‘ஏ’’ மற்றும் ‘‘பி’’ வகை 200 குடியிருப்புகள் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய அரசு அலுவலர்களுக்கான ‘‘ஏ’’ மற்றும் ‘‘பி’’ வகை குடியிருப்புகளானது, தரை மற்றும் 10 தளங்களுடன், ஒவ்வொரு கட்டடத் தொகுதிக்கும் 100 குடியிருப்புகள் வீதம் 2 கட்டட தொகுதிகளில் 200 குடியிருப்புகளை உள்ளடக்கியதாகும்.

மேலும், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் ஏலகிரி மலையில் பொதுப்பணித்துறையின் சார்பில் 61 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆய்வு மாளிகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு டி.ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வி. அன்புசெல்வன், இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு. ஆர். ஜெயசிங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.1.2018**